செய்தி வெளியீடு எண்.001

## செய்தி வெளியீடு–2.1.2009

## நெல்லை மாவட்டத்தில் கால்வாயில் தவறி விழுந்து இறந்தவரின் குடும்பத்திற்கு ஒரு இலட்ச ரூபாய் நிவாரண உதவி

## முதலமைச்சர் கலைஞர் ஆணை

---

நெல்லை மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தைச் சேர்ந்த திருமதி லெட்சுமி என்பவரின் கணவர் தங்கபாண்டி என்பவர் 14.11.2008 அன்று அம்பாசமுத்திரம் வட்டம், கன்னடியன் கால்வாயில் தவறி விழுந்து இறந்த செய்தி மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு.இரா.ஆவுடையப்பன் அவர்கள் மூலமாகத் தமது கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்து மிகுந்த வேதனையடைந்துள்ள முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இத்துயர சம்பவத்தால் பாதிக்கப்பட்டுள்ள தங்கபாண்டியின் மனைவி திருமதி லட்சுமிக்கும், அவரது குடும்பத்தாருக்கும் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளதுடன், வறுமை நிலையில், கணவரை இழந்து வாடும், திருமதி லட்சுமிக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்ச ரூபாய் நிவாரண உதவி வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (2.1.2009) ஆணையிட்டுள்ளார்.

*****

...ர், இயக்குநர்.
...க்கள் தொடர்புத் துறை,
...மைச்சர் செயலகம், சென்னை-9.